உ

# ஸ்ரீ மஹோற்சவ காலத் திருமுறைகள்



ஊரெழு

## சிவஸ்ரீ பால. வைத்தியநாத சிவாச்சாரியார்

அவர்களின்

## இரண்டாவது ஆண்டு ஞாபகார்த்த வெளியீடு

2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஸ்ரீ மஹோற்சவகாலத் திருமுறைகள்

அமரர் சிவஸ்ரீ.
பால. வைத்தியநாத சிவாச்சாரியார்

அவர்களின்

இரண்டாவது ஆண்டு ஞாபகார்த்த
வெளியீடு

சிவாச்சாரியபீடம்
ஊரெழு சுன்னாகம்
யாழ்ப்பாணம்
இலங்கை
2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர் :- **ஸ்ரீ மஹோற்சவ காலத் திருமுறைகள்**

மொழி :- **தமிழ்**

தொகுப்பு
வெளியீடு } **சிவாச்சாரியபீடம் ஊரெழு**

ஆண்டு :- **விக்கிரம வருஷம்**

**இரண்டாவது ஆண்டு**
**ஞாபகார்த்த வெளியீடு**

**28-04-2000**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை



## விநாயகர் துதி

பிடியதன் உருவுமை - கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ மஹோற்சவகால திருமுறைகள்

## உள்ளடக்கம்


**விஷயம்** **பக்கம்**

- ஆசியுரை
- வாழ்த்துரை
- முகவுரை

1. பஞ்ச புராணம்
2. கொடியேற்றம் அன்று ஸ்தம்பத்தடியில் ஓத வேண்டிய திருமுறைகளும் பண்ணும்
3. கொடிக்கவி
4. நவசந்திகளில் ஓதவேண்டிய தேவாரப் பண்புகள்
5. தேர் உற்சவத்தின் போது ஓதவேண்டிய திருப்பல்லாண்டு
6. கோளறு திருப்பதிகம்
7. திருமறைக் காட்டுப் பதிகம்
8. திருப்பொற்சுண்ணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்- பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர்
**பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர்**
(தலைவர்- சேர் பொன் வேதாகம ஆய்வு நிறுவனம்,
ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயம், நியந்த்ரீ, சிவன் கோவில் நல்லூர்)

அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

திருமுறைகளின் தெய்வீகப் பெருமையை சொற்களால் அளவிட முடியாது. அவை சைவத்தின் கருவூலம். எம்பெருமானின் அளப்பரிய கருணையையும் பெருமையையும் போற்றிக் கூறுவன. இறைவன் சந்நிதியில் திரிகரண சுத்தியுடனும் பக்தியுணர்வுடனும் 'திருச்சிற்றம்பலம்' எனத் தொடங்கி, எம்பெருமானை மனதிலிருத்தி 'பஞ்சபுராணம்' ஓதி 'திருச்சிற்றம்பலம்' என்ற நாமத்துடன் நிறைவு செய்யும் மரபு எமது ஆலயவழிபாட்டில் பன்னெடுங்காலம் நிலைபெற்று வருகின்றது. புண்ணிய நாட்களில் இறைவன் சந்நிதியில் திருமுறைகளைப் பாராயணம் செய்யும் மரபு குறிப்பிடத் தக்கது.

இத்தகைய புனிதத்துவம் மிக்க திருமுறைகளை மகோற்சவ காலங்களில் ஆலயங்களில் பக்தியுணர்வுடன் ஓதி, எம்பெருமானின் திருவருளுக்குப் பாத்திரராகும் வண்ணம் இத்தொகுப்பு நூலில் மகோற்சவ காலத் திருமுறைகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளதை சைவ உலகம் மனமுவந்து வரவேற்கும் என்பதில் ஐயமில்லை. இந்நூல் ஊரெழுவைச் சேர்ந்த அமரர் சிவஸ்ரீ பால வைத்தியநாத சிவாச்சாரியரின் இரண்டாம் சிரார்த்தத்தின் நினைவாக அவரது புதல்வர்களது முயற்சியால் வெளிவருவது மற்றுமொரு குறிப்பிடத்தக்க அம்சமாகும். சிவஸ்ரீ குருக்கள் அவர்கள் தம் வாழ்நாளில் எண்ணற்ற ஆலயங்களில் மகோற்சவங்களை நிகழ்த்தும் பெரும் பேறு பெற்றவர் அவரது வருஷாப்திகத்தின்போது சென்ற வருடம் ஆலயத்தில் பணியாற்றும் சிவாச்சாரியர்களுக்கு பயன்படும் 'ஸ்ரீ மகோற்சவ பத்ததி' என்ற அருமையான நூல் வெளிவந்து பரந்த அளவில் பாராட்டினைப் பெற்றது. இவ்வருடம் இத்தொகுப்பு நூல் பக்த கோடிகளின் நன்மை கருதி, முன்னர் குறிப்பிட்ட நூலுக்கு அணிசேர்க்கும் வகையில் வெளிவருவது சாலப் பொருத்தமாக அமைவதோடு காலத்தின் தேவையை நிறைவு செய்வதாகவும் உள்ளது. இந்நூல் சைவ உலகுக்குச் சிறந்ததொரு கைநூலாகவும் பொக்கிஷமாகவும் அமையும் என எதிர்பார்க்கலாம்.

இந்நூலில் வழிபாட்டில் ஓதுவதற்கு ஏற்ற பஞ்சபுராணம் கொடியேற்றத்தின்போது ஸ்தம்பத்தடியில் ஓதவேண்டிய திருமுறைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்கள், கொடிக்கவி, நவசந்திகளில் ஓதவேண்டிய தேவாரப்பண்கள், இரதோற்சவத்தின்போது ஓதவேண்டிய திருப்பல்லாண்டு ஆகியவற்றுடன் கோளறு பதிகம், திருமறைக்காட்டு பதிகம், திருப்பொற்சுண்ணம் ஆகியவை இடம்பெறுகின்றன.

திருமுறைகள் ஆலயவழிபாட்டில் நித்திய நைமித்தியங்களின் போது உரியவாறு தவறின்றி ஓதப்படுவது இன்றியமையாததாகும். மந்திரங்களை நிகர்க்கும் புனிதத்துவம் வாய்ந்த திருமுறைகள் உரிய பண்களுடன் ஓதப்படுமிடத்து, அவற்றின் மூலம் கிடைக்கும் பலன் அதிகமாகும். இத்தகைய அரிய நோக்கங்களை கருத்திற் கொண்டு தம் தந்தையாரின் ஞாபகார்த்தமாக அவரது புதல்வர்கள் குடும்பத்தினரின் சார்பாக வெளியிடும் இந்நூல் சகல நிலைகளிலும் சிறந்து விளங்கவும் ஆலயவழிபாடு மேன்மையடைந்து மேன்மைகொள் சைவநீதி உலகெங்கணும் விளங்கவும் எல்லாம் வல்ல தில்லைக் கூத்தனது திருவடிகளைப் பிரார்த்தித்து நல்லாசிகளைக் கூறுவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம். இவ்வரிய கைங்கரியத்தினை ஆற்ற முன்வந்த சிவாச்சாரியாரின் குடும்பத்தினருக்கு எமது நல்வாழ்த்துக்களைக் கூறி, சிவாச்சாரியாரின் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானத்திற்கு
வழிகாட்டும் திருமுறைகளைப் போற்றுவோமாக!

***விக்கிரம வருஷம் சித்திரை மீ 9***
**21.04.2000.** **ப.கோபாலகிருஷ்ண ஐயர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

குருபாதம்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர்

# ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

வழங்கிய

# வாழ்த்துச் செய்தி

**அன்புசார் பெருந்தகையீர்**

"ஸ்ரீ மஹோற்சவகாலத் திருமுறைகள்" என்னும் நூல் வெளிவருவதையிட்டு மனமகிழ்ச்சி அடைகின்றோம். எங்கள் சமயத்தின் ஆணிவேராகத் திகழும் திருமுறைப்பாக்கள் நாயன்மார்களினால் அருளிச் செய்யப்பட்டவை. இறையருளை பெற்றுத்தரக் கூடிய இப்பாக்களை ஒவ்வொரு மனிதனும் ஓதுவதன் மூலமாக புனிதமான வாழ்வை பெற்றுக் கொள்கிறான். இறைவனது புகழை வேதங்கள் எப்படி இயம்புகின்றனவோ அவ்வகையில் நின்று இயம்புவன திருமுறைகள். இத்திருமுறைகளை ஆலய மஹோற்சவ காலங்களில் ஓதுவது இன்றியமையாதது. குறிப்பாக கும்பாபிஷேகம், மஹோற்சவம் போன்றவற்றில் ஓதுவதற்கென பண்ணும் திருமுறைகளும் தொகுக்கப்பட்டு அவற்றுக்கான இராக, தாள, அமைப்புகளுடன் வெளிவருவது எல்லோருக்கும் பயனுள்ளதாக அமையும். இந் நூல் இந் நாட்டில் வாழ்ந்த சிவபூஜாதுரந்தரர், சிவாச்சாரிய திலகம் சிவஸ்ரீ பால. வைத்தியநாத சிவாச்சாரியாரின் இரண்டாவது ஆண்டு நினைவாக வெளிவருவது மிகப் பொருத்தமானதாகும். அவர்கள் வாழ்கின்ற காலங்களில் ஆலய விழாக்களில் ஒழுங்காக திருமுறைகள் ஓதவேண்டும் என்பதை நியமமாக கொண்டவர். சிவாச்சாரியருடைய நினைவை நிதர்சனமாக்கும் முகமாக அவரது புத்திரர்கள் இந் நூலை தொகுத்து வெளியிடுவது வரவேற்கத்தக்கது. இவர்களது பணிகளை இறைவன் ஆசீர்வதிப்பாராக. எல்லோரும் இந் நூலைப் பெற்று பயன்பெற இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

2வது குருமஹா சந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக**
**ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# முகவுரை

ஆலயங்களில் நடைபெறும் நைமித்திக உற்சவங்களில் மஹோற்சவமே சிறந்தது என சிறப்பித்துக் கூறப்படுகின்றது. இறைவனுடைய ஐந்தொழில்களைக் குறித்து நிற்கும் மஹோற்சவமானது நித்தியபூஜையின் தத்துவத்தைப் பேணுவதோடு நித்தியத்தின் பூரணத்தை பெறுவதற்கு நடாத்தப்பட்டுவரும் உற்சவமாகும்.

இவ்வாறு ஆலயங்களில் நடைபெறும் மஹோற்சவ காலங்களில் அவ்வவ் இடங்களுக்கு ஏற்ப ஓதவேண்டிய திருமுறைகளை ஆசாரசீலராய் பண்ணிசையோடு பாடுவதே சிவபுண்ணியமாகும். மஹோற்சவ காலங்களில் கொடியேற்றும் பொழுது ஸ்தம்பத்தடியிலும், நவசந்திகளிலும் அந்தந்த தாளங்களுக்குரிய பண்களைத் தெரிந்து பாடுவதே முறையாகும். அப்படி பண்ணோடு பாடத் தெரியாவிட்டாலும் அந்தந்தப் பண் அமைந்த திருமுறைகளையாவது பாடுவது சிறப்பாகுமென்று முன்னோர்கள் கூறுவர்.

ஆகவே திருமுறைகளை ஓதுபவர்களுக்கு உபகாரமாகவும் இனிவரும் இளஞ்சமுதாயத்தினருக்கு மரபு வழியைப் பின்பற்றிவரவும் பெரிதும் பயன்படும் என்ற நோக்கத்தோடு மஹோற்சவ காலங்களில் அவ்வவ்விடங்களுக்கேற்ப ஓதவேண்டிய திருமுறைகளும் அவைக்குரித்தான பண், இராகம், தாளம் போன்றவற்றைக் குறித்து "ஸ்ரீ மஹோற்சவகாலத் திருமுறைகள்" என்ற பெயருடன் ஒரு சிறிய தொகுப்பாக வெளியிடப்படுகிறது.

அமரத்துவம் எய்திய எங்களது அருமைத் தந்தையரான சிவஸ்ரீ பால. வைத்தியநாத சிவாச்சாரியாரின் இரண்டாவது ஆப்திக ஞாபகார்த்தமாக இந் நூல் வெளியிடப்படுகின்றது.

இந் நூலின் முற்பகுதியில் பஞ்சபுராணமும், மஹோற்சவ காலங்களில் கொடிஸ்தம்பத்தடியில் கணபதிதாளம், மூஷிகதாளம், விருஷபதாளம், சிம்மதாளம், மயூரதாளம் என்ற வரிசையில் ஸ்ரீ மஹோற்சவ பத்ததியில் தெரிவிக்கப்பட்ட நியதிகளின்படி ஒவ்வொரு தாளத்துக்கும் நவசந்திகளிலும் ஓதவேண்டிய பண்களுக்கும் சைவசமய நால்வர்களினால் அருளிச்செய்த தேவாரப்பதிகத்தில் இருந்தும் மும்மூன்று தேவாரங்களைத் தெரிந்து உரிய இராக, தாள அமைப்புகளுடன் தொகுக்கப்பட்டுள்ளன. அத்துடன் கொடியேற்ற முன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதவேண்டிய உமாபதி சிவாச்சாரியார் அருளிய கொடிக்கவியும் தேர் உற்சவத்தின்போது ஓதவேண்டிய சேந்தனார் சுவாமிகள் அருளிய திருப்பல்லாண்டும் சேர்க்கப்பட்டு மேலும் உற்சவகாலத்தில் சண்டேஸ்வர அனுக்கிரக உற்சவத்திலும் மஹாகும்பாபிஷேக தினத்திலும் திருக்கதவம் திறக்க திருநாவுக்கரசு நாயனார் பாடிய திருமறைக் காட்டுப் பதிகமும் திருஞானசம்பந்தர் அருளிய கோளறு திருப்பதிகமும் சேர்க்கப்பட்டு இறுதியாக தீர்த்தோற்சவத்திலே சூர்ணம் இடிப்பதற்கு ஓதப்படும் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருப்பொற்சுண்ணமும் சேர்த்து தொகுக்கப்பட்டுள்ளது.

ஆசியுரை, வாழ்த்துரை வழங்கி நூலைச் சிறப்பித்த பேராசிரியர் ப கோபாலகிருஷ்ண ஐயர், ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய ஸ்வாமிகள் ஆகியோருக்கு எங்கள் பண்வன்பான நன்றிகள் உரித்தாகுக.

இத்தொகுப்பினை குறுகிய காலப்பகுதியில் பார்வையிட்டு வழுக்களை சீர்செய்த "பண்ணிசை மாமணி" தாவடியூர் ஞா.சு திருஞானசம்பந்தர் அவர்களுக்கும் நூலினை அழகுற கணனி மூலம் அச்சிட்டுத் தந்த சாந்தி அச்சக உரிமையாளர் திரு. தி. நாகரத்தினம் அவர்களுக்கும் தொகுப்பினை கைப்பிரதியாக அமைக்க உதவிய செல்வி ப. மீனாம்பிகை அவர்களுக்கும் எம் நன்றிகள் உரித்தாகுக மேலும் உதவிகள் பல புரிந்த மற்றும் எல்லோருக்கும் என்றும் எம் நன்றிகள் உரித்தாகுக.

இவ்வாறு தொகுக்கப்பட்டு வெளியிடப்படும் "ஸ்ரீ மஹோற்சவ கால திருமுறைகள்" என்னும் சிறிய தொகுப்பு நூலை சைவநெறி ஒழுகும் அடியார்கள் அன்பர்கள் இதனை ஏற்று உரிய இடங்களில் பயன்படுத்தி நிலையான சிவபுண்ணிய பேரின்பம் பெறுவீர்களாக.

சுபமஸ்து.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

சிவாச்சாரியபீடம்
ஊரெழு.

**பிரம்மஸ்ரீ**
**வை. சபேஸ்வரசர்மா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்சபுராணம்

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

**இராகம்- கெம்பீரநாட்டை**
**தாளம் - ஆதி** **பண் - நட்டபாடை**

அங்கமும் வேதமும் ஓது நால்வர் அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி மருக நிலாவிய மைந்த சொல்லாய்
செங்கய லார்புனற் செல்வ மல்கு சீர்கொள் செங்காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தி யாடுங் கணபதி யீச்சரங் காமுறவே.

-- திருஞானசம்பந்தர்.

## திருவாசகம்

**இராகம்- மோகனம்**

கண்களிரண்டும் அவன்கழல் கண்டு களிப்பன ஆகாதே
காரிகை யார்கள்தம் வாழ்விலென் வாழ்வுகடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடுமாறு மறந்திடும் ஆகாதே
மாலறி யாமலர்ப் பாதம்இரண்டும் வணங்குதும் ஆகாதே
பண்களி கூர்தரு பாடலோடாடல் பயின்றிடு மாகாதே
பாண்டிநன் னாடுடை யான்படை யாட்சிகள் பாடுதுமாகாதே
விண்களி கூர்வதோர் வேதகம்வந்து வெளிப்படு மாகாதே
மீன்வலை வீசிய கானவன்வந்து வெளிப்படு மாயிடிலே

-- மாணிக்கவாசகர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

**இராகம் - ஆனந்தபைரவி**

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா ஒன்றே
    உணர்வு சூழ் கடந்த தோருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண் மணிக்குன்றே
    சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
    அம்பல மாடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்து கத்தாயைத்
    தொண்டனேன் விளம்புமா விளம்பே

-- திருமாளிகைத்தேவர்

## திருப்பல்லாண்டு

**இராகம் - ஆனந்தபைரவி**

சீருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

**இராகம்- மத்தியமாவதி**

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டும், நான் மகிழ்ந்துபாடி
அறவா!நீ ஆடும்போது உன் அடியின்கீழ் இருக்க என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# திருப்புகழ்

கைத்தல நிறைகனி யப்பமொடவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடு
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

-அருணகிரிநாதர்

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா(து) துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹோற்சவத்தின் போது தம்பத்தடியில் ஓத வேண்டிய திருமுறைகள்

## கணபதி தாளம்

**இராகம் : காம்போதி**
**தாளம் : ரூபகம்** **பண் : தக்கராகம்**

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட உருவ மென்கொலோ.

-- சம்பந்தர்

**இராகம் : காம்போதி**
**தாளம் : ஆதி** **பண் : தக்கராகம்**

மாந்தர்தம் பானறு நெய்மகிழ்ந் தாடி
வளர்ச டைமேற்புனல் வைத்து
மோந்தை முழாக்குழ றாளமொர் வீணை
முதிரவோர் வாய்மூரி பாடி
ஆந்தை விழிச்சிறு பூதத்தர் பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
சாந்தணி மார்பரோ தையலை வாடச்
சதுர் செய்வதோ விவர்சார்வே.

-- சம்பந்தர்

**இராகம் : காம்போதி**
**தாளம் : ஆதி** **பண் : தக்கராகம்**

மத்தம் மதயானை யின்வெண் மருப்புந்தி
முத்தங் கொணர்ந்தெற்றி யொர் பெண்ணைவடபால்
பத்தர் பயின்றேத்திப் பரவுந் துறையூர்
அத்தாவுனை வேண்டிக் கொள்வேன் றவநெறியே.

-- சுந்தரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூஷிக (விருஷபம்) தாளம்.

**இராகம் : கேதாரகௌளை**

**தாளம் : ஆதி** **பண் : காந்தாரபஞ்சமம்**

இடரினுந் தளரினு மெனதுறு நோய்
தொடரினு முனகழ றொழு தெழுவேன்
கடறணி லமுதோடு கலந்த நஞ்சை
மிடறினி லடக்கிய வேதியனே.
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே.

-- சம்பந்தர்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலினுட் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

--அப்பர்

பிழைத்த பிழையொன் றறியேனான் பிழையைத்தீரப் பணியாயே
மழைக்கணல்லார் குடைந்தாட மலையுநிலனுங் கொள்ளாமைக்
கழைக்கொள் பிரசங் கலந்தெங்குங் சுழனிமண்டிக் கையேறி
அழைக்குந்திரைக்கா விரிக்கோட்டத் தையாறுடைய வடிகளோ.

-- சுந்தரர்

# சிம்ம தாளம்

**இராகம் : கம்பீரநாட்டை**

**தாளம் : ரூபகம்.** **பண் : நட்டபாடை**

மையாடிய கண்டன்மலை மகள்பாகம துடையான்
கையாடிய கேடில்கரி யுரிமூடிய வொருவன்
செய்யாடிய குவளைம் மலர் நயனத் தவனோடும்
நெய்யாடிய பெருமானிடம் நெய்த்தான மெனீரே

-- சம்பந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நத்தார்படை ஞானன்பசு ஏறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத்தானே.

-- சுந்தரர்

அங்கம்மொழி அன்னாரவ ரமரர் தொழுதேத்த
வங்கம்மலி கின்றகடல் மாதோட்ட நன்நகரில்
பஞ்சஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண்ணர வசைத்தான்திருக் கேதீச்சரத்தானே.

-- சுந்தரர்

## மயூர தாளம்

**இராகம்- மாயாமாளகௌளை**

**தாளம்- ரூபகம்** **பண்-இந்தளம்**

விண்ணிலான பிறைசூடுவர் தாழ்ந்து விளங்கவே
கண்ணினால் தங்கன்னுடலம் பொடியாக்கினார்
பண்ணி லானவிசை பாடன்மல் குந்திருவாஞ்சியத்
தண்ணலார் தம்மடிபோற்ற வல்லார்க்கில்லை யல்லலே.

-- சம்பந்தர்

**தாளம் - ஆதி**

இரண்டுகொ லாமிமை யோர்தொழு பாதம்
இரண்டுகொ லாமிலங் குங்குழை பெண்ணாண்
இரண்டுகொ லாமுரு வஞ்சிறு மான்மழு
இரண்டுகொ லாமவ ரெய்தின தாமே.

-- அப்பர்

**தாளம் - ஆதி**

தலைக்குத் தலைமாலை அணிந்த தென்னே
சடைமேயற் கங்கை வெள்ளம் தரித்த தென்னே
அலைக்கும் புலித்தோல் கொண்டசைத்த தென்னே
அதன்மேற் கதநாகக்கச் சார்த்த தென்னே
மலைக்குந் நிகரொப் பனவன் திரைகள்
வலித்தெற் மறிமுழங் கிவலம் புரிகொண்
டலைக்குங் கடலங் கரைமேல் மகோதை
அணியார் பொழில்அஞ் சைக்களத் தப்பனே.

--சுந்தரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடிக்கவி

ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே யிடம்ஒன்று மேலிடில்ஒன்று
ஒளிக்கும் எனினும் இருள் அடராதுள் ளுயிர்க்குயிராம்
தெளிக்கு மறிவு திகழ்ந்துள தேனுந் திரிமலத்தே
குளிக்கும் உயிர்அருள் கூடும் படிக்கொடி கட்டினனே.

பொருளாம் பொருளேது போதேது கண்ணேது
இருளாம் வெளியேது இரவேது - அருளாளா
நீபுரவா வையமெலாம் நீ அறியக் கட்டினேன்
கோபுர வாசற் கொடி.

வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்
தாக்கா துணர்வரிய தம்மையணை நோக்கிப்
பிறித்தறிவு தம்பிற் பிரியாமை தானே
குறிக்கும் அருள்நல்கக் கொடி.

அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமற் காட்டக் கொடி.

- உமாபதி சிவாச்சாரியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவசந்திகளில் ஓதவேண்டிய தேவாரப் பண்கள்

## பிரம்ம சந்தி

**இராகம்- நீலாம்பரி**
**தாளம்- கண்டசாபு** **பண்- மேகராகக்குறிஞ்சி**

அன்னமலி பொழில்புடைசூழ் ஐயாற்றெம் பெருமானை அந்தண்காழி
மன்னியசீர் மறைநாவன் வளர்ஞான சம்பந்தன் மருவுபாடல்
இன்னிசையால் இவைபத்தும் இசையுங்கால் ஈசனடி ஏத்துவார்கள்
தன்னிசையோடு அமருலகில் தவநெறிசென் றெய்துவார் தாழாதன்றே.

**தாளம் - ஆதி**

நீறு சேர்வதோர் மேனியர் நேரிழை
கூறு சேர்வதோர் கோல மாய்
பாறு சேர்தலைக் கையர் பராய்த்துறை
ஆறு சேர் சடை அண்ணலே.

**தாளம் - ஆதி**

செல்வ மல்கிய செல்வர் பராய்த்துறைச்
செல்வர் மேற் சிதை யாதன
செல்வன் ஞானசம் பந்தன் செந்தமிழ்
செல்வமாம் இவை செப்பவே.

-- சம்பந்தர்.

## இந்திர சந்தி (கிழக்கு)

**இராகம்- நவரோஸ்**
**தாளம்- ரூபகம்** **பண்- காந்தாரம்**

பூசஇனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேசஇனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசைகெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம்புகழ்வது நீறு திருஆலவாயான் திருநீறே.

-- சம்பந்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுண்ணவெண் சந்தனச் சாந்தும் சுடர் திங்கட் சூளாமணியும்
வண்ண வரிவை யுடையும் வளரும் பவள நிறமும்
அண்ணல் அரண்முர ணேறு மகலம் வளாய வரவும்
திண்ணன் கெடிலப் புனலும் உடையாரொருவர் தமர்நாம்
அஞ்சுவதி யாதொன்றுமில்லை அஞ்ச வருவதுமில்லை.

-- அப்பர்.

மறைகளாயின நான்கும் மற்றுள பொருள்களும் எல்லாம்
துறையுந் தோத்திரத்திறையும் தொன்மையும் நன்மையும் ஆய
அறையும் பூம்புனலானைக் காவுடை யாதியை நாளும்
இறைவன் என்றடி சேர்வார் எம்மையும் ஆளுடையாரே.

-- சுந்தரர்.

## அக்கினிசந்தி (தென்கிழக்கு)

**இராகம்- நவரோஸ்**
**தாளம்- மிஸ்ர- சாபு.** **பண்- கொல்லி**

சந்தமார் அகிலொடு சாதிதேக் கம்மரம்
உந்துமா முகலியின் கறையினில் உமையொடு
பந்தமார் பொழில்வளர் மல்குவண் காளத்தி
எந்தையார் இணையடி என்மனத் துள்ளவே.

-- சம்பந்தர்.

**தாளம்- ஆதி**

கூற்றாயின வாறு விலக் ககிலீர்
 கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே இரவும் பகலும்
 பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம் படியே
 குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதி கைக்கெடில
 வீரட்டானத் துறை அம்மானே.

-- அப்பர்

**தாளம் - ரூபகம்.**

தம்மையே புகழ்ந் திச்சை பேசினும்
 சார்வினுந் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே யெந்தை
 புகலூர் பாடுமின் புலவீர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மையே தரும் சோறுங் கூறையும்
ஏத்தலா மிடர் கெடலுமாம்
அம்மையே சிவ லோகமாள் வதற்
கியாதும் ஐயுற வில்லையே.

- சுந்தரர்.

## யமசந்தி (தெற்கு)

**இராகம் -பைரவி**

**தாளம்- ஆதி** **பண்- கௌசிகம்**

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெலாம் அரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே

-- சம்பந்தர்

**தாளம் - ரூபகம்**

குற்றம்நீ குணங்கள்நீ கூடலால வாயிலாய்
சுற்றம்நீ பிரானும்நீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூல் கருத்தும்நீ அருத்தமின்ப மென்றிவை
முற்றும்நீ புகழ்ந்துமுன் உரைப்பதென முகம்மனே.

**தாளம் - ஆதி**

இயமன் தூதரு மஞ்சுவர் இன்சொலால்
நயம் வந்தோதவல் லார்தமை நண்ணினால்
நியமந் தானினை வார்க்கினி யானெற்றி
நயன னாமம் நமச்சிவாயவே.

-- சம்பந்தர்

## நிருதிசந்தி (தென்மேற்கு)

**தாளம் - ரூபகம்** **பண் -நட்டபாடை**

**இராகம் - கம்பீரநாட்டை**

தோடுடைய செவியன விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடி பூசியென் னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மா னிவன்றே.

-- சம்பந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெம்புந்திய கதிரோன்ஒளி விலகும் விரி சாரல்
அம்புந்திழு எயிலெய்தவன் அண்ணாமலை யதனைக்
கொம்புந்துவ குயிலாலுவ குளிர் காழியுள் ஞான
சம்பந்தன் தமிழ் வல்லவர் அடிபேணுதல் தவமே.

-- சம்பந்தர்

பண்ணின் தமிழிசை பாடலின் பழவேய் முழவதிரக்
கண்ணின் ஒளி கனகச்சுனை வயிரமலை சொரிய
மண்ணின்றன மதவேழங்கள் மணிவாரிக் கொண்டெறியக்
கிண்ணொன்றிசை முரலுந்திருக் கேதார மெனீரே.

-- சுந்தரர்

## வருணசந்தி (மேற்கு)

**இராகம் - நாதநாமக்கிரியை**

**தாளம் - திரிபுடை** **பண் - சீகாமரம்**

மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் னுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்.

-- சம்பந்தர்

மைப்பயந்த வொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பயந்த நீற்றான் கபாலீச் சரமமர்ந்தான்
ஐப்பசி யோண் விழாவு மருந்தவர்கள்
துய்ப்பனவுங் காணாதே போதியோ பூம்பாவாய்.

-- சம்பந்தர்

பிழையுளன பொறுத்திடுவர் என்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே படலம் என்கண் மறைப்பித்தாய்
குழைவிரவு வடிகாதா கோயிலுளா யேயென்னை
உழையுடையான் உள்ளிருந்து உளோம் போகிர்என்றானே.

-- சுந்தரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாயுசந்தி (வடமேற்கு)

**இராகம் - காம்போதி**
**தாளம் - ஆதி** **பண் - தக்கேசி**

வேதமோதி வெண்ணூல்பூண்டு வெள்ளை யெருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார் புலியினுரி தோலார்
நாதாவெனவு நக்காவெனவு நம்பாவென நின்று
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார் பழனநக ராரே.
- சம்பந்தர்

அந்த ணாளனுன் னடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்றன் ஆருயி ரதனை
வவ்வி னாய்க்குன்றன் வண்மைகண் டடியேன்
எந்தை நீயெனை நமன்தமர் நலியில்
இவன்மற் றென்னடி யானென விலக்குஞ்
சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே.

சாதலும் பிறத்தலும் தவிர்த்தெனை வகுத்துத்
தன்னருள் தந்தஎம் தலைவனை மலையின்
மாதினை மதித்தங்கோர் பால்கொண்ட மணியை
வருபுனல் சடையிடை வைத்தஎம் மானை
ஏதிலென் மனத்துக்கோர் இரும்புண்ட நீரை
எண்வகை ஒருவனை எங்கள்பி ரானைக்
காதில்வெண் குழையனைக் கடல்கொள மிதந்த
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே.
-- சுந்தரர்.

## குபேர சந்தி (வடக்கு)

**இராகம்- காம்போதி**
**தாளம்- ஆதி** **பண்- தக்கராகம்**

பொடியுடை மார்பினர் போர்விடை யேறிப்
பூதகணம் புடை சூழக்
கொடியுடை யூர் திரிந்து ஐயம்
கொண்டு பலபல கூறி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவுடை வாள்நெடுங் கண்உமை பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்க்
கடி கமழ் மாமல ரிட்டுக்
கறைமிடற் றானடி காண்போம்.
-- சம்பந்தர்.

**தாளம்- ரூபகம்**

மத்தம் மதயானை யின்வெண் மருப்புந்தி
முத்தங் கொணர்ந்தெற்றி யொர்பெண்ணை வடபால்
பத்தர் பயின்றேத்திப் பரவுந் துறையூர்
அத்தா வுனைவேண்டிக் கொள்வேன் றவநெறியே.
-- சுந்தரர்.

**தாளம் - கண்டசாபு**

செருமேவு சலந்தரனைப் பிளந்தசுடர் ஆழி
செங்கண்மலர்ப் பங்கயமாகச் சிறந்தானுக் கருளி
இருள்மேவும் அந்தகன்மேல் திரிசூலம் பாய்ச்சி
இந்திரனைத் தோள்முரித்த இறைவன் ஊர்வினவில்
பெருமேதை மறையொலியும் பேரிமுழவு ஒலியும்
பிள்ளையினந் துள்ளிவிளை யாட்டொலியும் பெருகக்
கருமேதி புனல்மண்டக் கயல்மண்டக் கமலங்
களிவண்டின் கணம்இரியும் கயைநல்லூர் காணே.
-- சுந்தரர்.

## ஈசான சந்தி (வடகிழக்கு)

**இராகம்- பந்துவராளி**
**தாளம் - கண்டசாபு**

**பண்- சாலாபாணி**
**பதிலாக- சாதாரி**

பாடன்மறை சூடன்மதி பல்வளையொர்
பாகமதின் முன்றொர் கணையால்
கூடவெரி யூட்டியெழில் காட்டிநிழல்
கூட்டு பொழில் சூழ்பழையனுள்
மாடமழ பாடியுறை பட்டிசர
மேயகடி கட்டரவினார்
வேடநிலை கொண்டவரை வீடுநெறி
காட்டிவினை வீடுமவரே.
-- சம்பந்தர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தாளம்- ஆதி**

திடமலி மதிளணி சிறுகுடி மேவிய
படமலி அரவுடை யீரே
மடமலி அரவுடை யீர்உமைப் பணிபவர்
அடைவதும் அமருலகதுவே.

**தாளம் - ரூபகம்**

தலையே நீ வணங்காய் - தலை
மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீவணங்காய்

-- அப்பர்.

✳

# தேர் உற்சவத்தின் போது ஓதவேண்டிய

(வடம் இழுக்கமுன்)

# சேந்தனார் சுவாமிகள் அருளிய திருப்பல்லாண்டு

திருச்சிற்றம்பலம்

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போயகல
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி அறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே. (1)

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி
ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள்அள
வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள
பொருள்என்றே பல்லாண்டு கூறுதுமே. (2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிட்டையிலாவுடன் நீத் தென்னை
ஆண்ட நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச்
சீராட்டுந் திறங்களு மேசிந்தித்(து)
அட்ட மூர்த்திக்கென அகம்நெக
ஊறும் அமிர்தினுக்(கு) ஆலநிழற்
பட்டனுக்(கு) என்னைத்தன் பாற்படுத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே. (3)

சொல்லாண்டசுரு திப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யுஞ்சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரள் மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. (4)

புரந்தரன் மாலயன் பூசலிட் (டு)
ஓலமிட் (டு) இன்னம் புகலரிதாய்
இரந்திரந் (து) அழைப்பஎன் னுயிராண்ட
கோவினுக் கென்செய வல்லமென்றும்
கரந்துங் கரவாத கற்பக
னாகிக் கரையில் கருணைக்கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப்
பாங்கற்கே பல்லாண்டு கூறுதுமே. (5)

சேவிக்க வந்தயன் இந்திரன்
செங்கண்மால் எங்குந் திசைதிசையென
கூவிக் கவர்ந்து நெருங்கிக்
குழாங்குழா மாய்நின்று கூத்தாடும்
ஆவிக் (கு) அமுதைஎன் ஆர்வத்
தனத்தினை அம்பனை ஒப்பமரர்
பாவிக்கும் பாவகத் (து) அப்புறத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே. (6)

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும்பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவா ருலகில்
ஊரும் உலகுங் கழற
உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே. (7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேலுங் கயலுங் திளைக்குங்
    கண்ணார்இளங் கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங்கு
    மென்று புண்ணியர் போற்றிசைப்ப
மாலும் அயனும் அறியாநெறி
    தந்து வந்தென மனத்தகத்தே
பாலும் அமுதமும் ஒத்துநின்
    றானுக்கே பல்லாண்டு கூறுதுமே. (8)

பாலுக்குப் பாலகன் வேண்டி
    அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்(று)அருள்
    செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
    தில்லைச் சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
    லானுக்கே பல்லாண்டு கூறுதுமே. (9)

தாதையைத் தாளற வீசிய
    சண்டிக்கிவ் அண்டத் தொடுமுடனே
பூதலத் தோரும் வணங்கப்பொற்
    கோயிலும் போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும்
    நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத்
    தானுக்கே பல்லாண்டு கூறுதுமே. (10)

குழலொலி யாழொலி கூத்தொலி
    ஏத்தொலி எங்குங் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவுஞ்சென்று
    விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி
    யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடிஎம்
    மானுக்கே பல்லாண்டு கூறுதுமே. (11)

ஆரார் வந்தார் அமரர்
    குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன்
    அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர்
    குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும்
    ஆடியும் பல்லாண்டு கூறுதுமே. (12)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தை எந்தாய் சுற்ற(ம்) முற்றும்
    எமக்கமு தாம்எம் பிரான்என்றென்று
சிந்தை செய்யுஞ் சிவன்சீர்
    அடியார் அடிநாய் செப்புறை
அந்தமில் ஆனந்தச் சேந்தன்
    எனைப்புகுந் தாண்டுகொண் டாருயிர்மேல்
    பந்தம் பிரியப் பரிந்தவனே
என்று பல்லாண்டு கூறுதுமே. (13)

திருச்சிற்றம்பலம்

❋



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோளறு திருப்பதிகம்

## திருஞானசம்பந்தர் அருளியது

இராகம் : நவரோஸ்.
தாளம் : திஸ்ரதிரிபுடை                பண் : பியந்தைக்காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறுதிங்கள் கங்கை முடிமேல ணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறுதிங்கள் செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே. (1)

என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க
எருதேறி ஏழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொடேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்கள வைதாம்
அன்பொடு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே. (2)

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசை தெய்வமான பலவும்
அருநெறி நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிநுதல் மங்கையோடு வடபா லிருந்து
மறையோ துமெங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய் களான பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே.

(4)

நஞ்சணி கண்டனெந்தை மடவாள் தனோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேல அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின வவுணரோடு முருமிடியு மின்னு
மிகையான பூத மவையும்
அஞ்சிடு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே.

(5)

வாள்வரி யதளதாடை வரிகோ வணத்தர்
மடவாள் தனோடு முடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே.

(6)

செப்பிள முலைநன் மங்கை யொருபாகமாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்புள மதியுமப்பு முடிமேல அணிந்தென்
உளமே புகுந்தது அதனால்
வெப்பொடு குளிரும்வாத மிகையான பித்தும்
வினையா வைந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

(7)

வேள்பட விழிசெய்தன்று விடைமே லிருந்து
மடவாள் தனோடு முடனாய்
வாண்ம திவன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழ்கடல் சூழிலங்கை யரையன்ற னோடும்
இடரா னவந்து நலியா
ஆழுகடல் நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே.

(8)

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறு மெங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமேல ணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனுமாலு மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவைநல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

(9)

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியுநாக முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரொ டணமணைவாதி லழிவிக்கு மண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே.

(10)

தேனமர் பொழில்கொள்ளாலை விளைசெந்நெல்துன்னி
வளர்செம் பொன்னெங்கு நிகழ்
நான்முக னாதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும்நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ண முரைசெய்
ஆனசொல் மலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே.

(11)

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# திருமறைக்காட்டுப் பதிகம்

## (திருக்குறுந்தொகை)

### திருநாவுக்கரசர் அருளியது

**இராகம் - மாயாமாளவ கௌளை**
**தாளம் - ஆதி**

பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே. (1)

ஈண்டு செஞ்சடை யாகத்துள் ஈசரோ
மூண்ட கார்முகி லின்முறிக் கண்டரோ
ஆண்டு கொண்டநீ ரேயருள் செய்திடும்
நீண்ட மாக்கத வின்வலி நீக்குமே (2)

அட்ட மூர்த்திய தாகிய அப்பரோ
துட்டர் வான்புரஞ் சுட்ட சுவண்டரோ
பட்டங் கட்டிய சென்னிப் பரமரோ
சட்ட விக்கத வந்திறப் பிம்மினே (3)

அரிய நான்மறை யோதிய நாவரோ
பெரிய வான்புரஞ் சுட்ட சுவண்டரோ
விரிகொள் கோவண ஆடை விருத்தரோ
பெரிய வான்கத வம்பிரி விக்கவே (4)

மலையி னிடிருக்கும் மறைக் காடரோ
கலைகள் வந்திறஞ் சுங்கழ லேத்தரோ
விலையின் மாமணி வண்ண உருவரோ
தொலைவி லாக்கத வந்துணை நீக்குமோ (5)

பூக்குந் தாழை புறணி யருகெலாம்
ஆக்குந் தண்பொழில் சூழ்மறைக் காடரோ
ஆர்க்குங் காண்பரி யீரடி கேளுமை
நோக்கிக் காணக் கதவைத் திறவுமே (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெந்த வெண்பொடிப் பூசும் விகிர்தரோ
அந்த மில்லி அணிமறைக் காடரோ
எந்தை நீயடி யார்வந் திறைஞ்சிட
இந்த மாக்கத வம்பிணி நீக்குமே

(7)

ஆறு சூடும் அணிமறைக் காடரோ
கூறு மாதுமைக் கிந்த சூழகரோ
ஏற தேறிய எம்பெரு மானிந்த
மாறி லாக்கத வம்வலி நீக்குமே

(8)

சுண்ண வெண்பொடிப் பூசுஞ் சுவண்டரோ
பண்ணி யேறுகந் தேறும் பரமரோ
அண்ண லாதி அணிமறைக் காடரோ
திண்ண மாக்கத வந்திறப் பிம்மினே

(9)

விண்ணு ளார்விரும் பியெதிர் கொள்ளவே
மண்ணு ளார்வணங் கும்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே.

(10)

அரக்க னைவிர லாலடர்த் திட்டநீர்
இரக்க மொன்றிலீ ரெம்பெரு மானிரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக்க இக்கத வந்திறப் பிம்மினே.

-- திருநாவுக்கரசு நாயனார்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# திருப்பொற்சுண்ணம்

## ஆனந்தமனோலயம்

### தில்லையிலருளிச் செய்யப்பட்டது

### அறுசீரடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

**இராகம்- மோகனம்**

முத்துநற் றாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபநற் றீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியுங்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
னத்தனை யாறனம் மானைப்பாடி
யாடப்பொற் சுண்ண மிடித்துநாமே. (1)

பூவியல் வார்சடை யெம்பிராற்கு
பொற்றிருச் சுண்ண மிடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் றொண்டர் புறநிலாமே
குனிமின் றொழுமினெங் கோனெங்கூத்தன்
றேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ண மிடித்துநாமே. (2)

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
யிந்திரன் கற்பக நாட்டியெங்கு
மொழிற்சுடர் வைத்துக் கொடியெடுமி
னந்தரர் கோனயன் றன்பெருமா
னாழியா னாதனல் வேலன்றாதை
யெந்தர மாளுமை யாள்கொழுநற்
கேய்ந்த பொற்சுண்ண மிடித்துநாமே. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசணி மின்களு லக்கை யெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய வடியவர்க
ணின்று நிலாவுக வென்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாசவினையைப் பறித்து நின்று
பாடிப் பொற்சுண்ண மிடித்துநாமே. (4)

அறுகெடுப் பாரய னும்மரியு
மன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லா
நம்மிற்பின் பல்லதெ டுக்கவெட்டோஞ்
செறிவுடை மும்மதி லெய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே. (5)

உலக்கை பலவோச்சு வார்பெரிய
ருலகமெ லாமுரல் போதாதென்றே
கலக்க வடியவர் வந்து நின்றார்
காண வுலகங்கள் போதாதென்றே
நலக்க வடியோமை யாண்டு கொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்து பொற் சுண்ண மிடித்துநாமே. (6)

சூடகந் தோள்வளை யார்ப்பவார்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பவார்ப்ப
நாடவர் நந்தம்மை யார்ப்ப வார்ப்ப
நாமுமவர் தம்மையார்ப்ப வார்ப்பப்
பாடக மெல்லடி யார்க்குமங்கை
பங்கின னெங்கள் பராபரனுக்
காடக மாமலை யன்னகோவுக்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே. (7)

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை யார்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோற்றெம்பி ரானென்று சொல்லிச்சொல்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மையிம்மை
யாட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
யாடப்பொற் சுண்ண மிடித்துநாமே. (8)

வையக மெல்லா முரலதாக
மாமேரு வென்னு முலக்கைநாட்டி
மெய்யெனு மஞ்ச ணிறையவட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொ னுலக்கை வலக்கைபற்றி
யையன ணிதில்லை வாணனுக்கே
யாடப்பொற் சுண்ண மிடித்துநாமே. (9)

முத்தணி கொங்கைக ளாடவாட
மொய் சூழல் வண்டின மாடவாடச்
சித்தஞ் சிவனொடு மாடவாடச்
செங்கயற் கண்பனி யாடவாடப்
பித்தெம் பிரானொடு மாடவாடப்
பிறவி பிறரொடு மாடவாட
வத்தன் கருணையொ டாடவாட
வாடப்பொற் சுண்ண மிடித்துநாமே. (10)

மாடு நகைவா ணிலாவெறிப்பப்
வாய்திறத் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமி னந்தம்மை யாண்டவாறும்
பணி கொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமி னெம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
யாடுமி னம்பலத் தாடினானுக்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே. (11)

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் றன்னை
யையனை யையர் பிரானை நம்மை
யகப்படுத் தாட்கொண்டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோட்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே. (12)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீ
ரென்னுடை யாரமு தெங்களப்ப
னெம்பெரு மானிம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்றகப்பன்
றமைய னெம்மையன் றாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ண மிடித்நாமே. (13)

சங்க மரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயித முந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை யிரைப்ப வராவிரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே. (14)

ஞானக் கரும்பின் றெளிவைப்பாகை
நாடற் கரிய நலத்தைநத்தாத்
தேனைப் பழச்சுவை யாயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே. (15)

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேற்
றேவர்க் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவக மேந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவக னாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ண மிடித்துநாமே. (16)

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூனக மாமழுச் சூலம்பாடி
யும்பரு மிம்பரு முய்யவன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே (17)

அயன்றலை கொண்டு செண்டாடல்பாடி
யருக்க னெயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலா லுதைத்தல் பாடி
யியைந்தன முப்புர மெய்தல் பாடி
யேழை யடியோமை யாண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ண மிடித்துநாமே (18)

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் றில்லைபாடிச்
சிற்றம்ப லத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மே
லிட்டுநின் றாடு மரவம்பாடி
யீசற்குச் சுண்ண மிடித்துநாமே (19)

வேதமும் வேள்வியு மாயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையு மாயினார்க்குச்
சோதியு மாயிரு ளாயினார்க்குத்
துன்பமு மாயின்பமு மாயினார்க்குப்
பாதியு மாய்முற்று மாயினார்க்குப்
பந்தமு மாய்வீடு மாயினாருக்
காதியு மந்தமு மாயினாருக்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே (20)

திருச்சிற்றம்பலம்

**சாந்தி அச்சகம் (கொம்பியூட்டர் பிரின்ட்)**
**நாச்சிமார் கோயிலடி யாழ்ப்பாணம்**
**போன் 2821**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org